**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.390/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 7 |
| Name | : | குமரேசன், வயது 60 |
| Father Name/Husband Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | ஓலக்கோடு |
| Taluk | : | கல்குளம் |
| Calling | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of July 2026.

**(Accused present.).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஓலக்கோடில் வசித்து டிரபிக் இன்ஸ்பேக்டராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் சம்பவ காலத்தில் மார்த்தாண்டம் பணிமனையில் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்த காலத்தில் 07.11.2024 ஆம் தேதி தடம் எண். 307 சி என்ற அரசு பேருந்துக்கு ஆஜர் எதிரியை ஓட்டுனராக நியமித்தேன். என்னிடம் காட்டப்படும் எதிரியை பணி நியமித்ததற்கான சான்று நான் வழங்கியதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. போலீசார் என்னை விசாரித்த அன்று எதிரியை பணிநியமனம் செய்ததாக ஆவணங்கள் கொடுத்தீர்களா என்றால் நான் கொடுக்கவில்லை. எதிரியின் பணி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எங்களது அலுவலகத்தில் பராமரிக்கப்படும். இந்த வழக்கு

சம்பந்தமாக வேறு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.